**Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95**

Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month

Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17

வேணு : 21 | மே 2016 | கானம் : 10




Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO NAME NO SELF INTEREST ONLY GOD



ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.15/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ180/-

**மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்**
**வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை**



வேணு : 21 | மே 2016 | கானம் : 10

Delivered by India Post | www.indiapost.gov.in





மார்ச் 28 - ஏப்ரல் 3- கன்யாகுமரி மாயம்மா சமாஜத்தில்
ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்





ஏப்ரல் 11 - திருநாங்கூர் திருக்காவளம்பாடி ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி கோவில்
மஹா சம்ப்ரோக்ஷணம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடன் Eyetex ஸ்ரீதேவநாதன்

மார்ச் 18, 2016 சென்னை நாரத கானசபா முன்னாள் செகரெட்டரி
திரு.கிருஷ்ணஸ்வாமி அவர்களின் நினைவாஞ்சலியில்















ஏப்ரல் மே மாதங்களில் மதுரகீத உத்ஸவம், ராமாயணம், ஸ்ரீமத் பாகவத சத்சங்கங்கள் - பூர்ணிமாஜி - ஹூஸ்டன் நாமத்வார், ஃப்ளோரிடா, அலபாமா, அட்லாண்டா கோவில்களில் - அமெரிக்கா

ஏப்ரல் 28 – மே 3 – கோயமுத்தூர் ராம் நகர் ராமர் கோவிலில் ராமானுஜம்ஜி – ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்








ஏப்ரல் 21 பெங்களூரு ஜெயநகரில் கர்நாடகா நாமத்வார் துவக்கம்









ஏப்ரல் 14 – சேங்கனூரில்
சுத்த ப்ரேமிக வித்யா கேந்திரம் துவக்கம்
– ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி மஹாராஜ் அவர்கள்



ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 21 மே 2016 கானம்: 10

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே


| | |
|---|---|
| மதுரமான மஹநீயர்-242 | 05 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 08 |
| தாமோதரன் எனும் பெருமாயன் | 10 |
| சுத்த ப்ரேமிக வித்யா கேந்திரம் | 12 |
| பக்தி இல்லாமல் ஞானம் இல்லை | 13 |
| பிறவி முக்தியின் அவசியம் | 15 |
| ரூபகோஸ்வாமி | 25 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 27 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 30 |
| ப்ருந்தாவன கண்ணன் | 34 |
| மாலே மணிவண்ணா | 36 |


*ஒருவருக்கு தீவிரமான வைராக்யம் இருந்தால்தான் ஞானம் சித்திக்கும். அந்த வைராக்யம், வாழ்வில் ஏற்படும் கஷ்டத்தினாலோ, அல்லது உலக வாழ்க்கையில் ஏற்படும் வெறுப்பினாலோ அல்லது மரண பயத்தாலோ சிலருக்கு உண்டாகும். காரணமும் இல்லாமல் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், வைராக்யம் உண்டாகுமானால், அவர் முந்திய பிறவிகளிலேயே, ஞானமார்க்கத்தில் முன்னேறி உள்ளவராகத்தான் இருக்க வேண்டும்.*

*-யோக வாசிஷ்டம்*

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் - தேஷ் தாளம்: ஆதி

பல்லவி

மேலே விழுந்து அருள்செய்யும் ஸ்ரீநிவாஸன்
மேலோர் கைத் தொழும் தேவாதி தேவன்
(மேலே ..)

அனுபல்லவி

அருவிபோல் கருணை பொழியும் - ஒரு
உவமையில்லாத ஓரெழுத்து தெய்வம்
(மேலே ..)

சரணம்

நான்கு புருஷார்த்தங்களையும் அருள்வான்
நான் அங்கு எப்பொழுதும் அவன் திருவடியில்
நான் அங்கு இல்லாமல் இருந்திட
நன்கு அவன் அருள் செய்திடல் வேண்டும்
(மேலே ..)

முன்அட்டை: திருக்காவளம்பாடி ஸ்ரீராஜகோபாலஸ்வாமி மஹா சம்ப்ரோக்ஷணம்- ஏப்ரல் 11

பின் அட்டை- ஏகாதசி -ஏப்ரல் 3, சென்னையில் புதிய நிர்வாக அலுவலகத்தை ஸ்ரீஸ்வாமிஜி திறந்து வைத்து அருளுகிறார்கள்



# மதுரமான மஹனீயர் – 242

-டாக்டர்.ஆ.பாக்யநாதன்

கதிரவன் உதிக்கையில், வெளிச்சமும் வெப்பமும் இருக்கும். நிலவு வருகையில், குளிர்ச்சியும் பால் ஒளியும் இருக்கும். அதுபோலவே உலகில் சாதுக்களும், அவதார புருஷர்களும் உதிக்கையில், உலகம் முழுக்க ஒரு ஆன்மிக விழிப்பும் மலர்ச்சியும் ஏற்படும். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நமது இதிஹாசங்கள் மற்றும் மஹாமந்திரத்தின் மேன்மையை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பல்வேறு இடங்களில் எப்பொழுதும் எடுத்து சொல்லியும், அதை பல சீடர்கள் மூலமாக, உலகிலுள்ள பல நாடுகளில் பிரச்சாரம் செய்து வருவதும், அதன் மூலம் ஏராளமான மக்கள் பல்வேறு விதமான பலன்களை அடைந்து வருவதும், நாம் அறிந்ததே.

அப்படி அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியா, ஸ்விட்சர்லாந்து, பிஜி, பப்புவா நியூ கினியா, மத்திய கிழக்காசிய நாடுகள், இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் அன்பர்கள் நாம மஹிமையையும் குருநாதன் மஹிமையையும் எடுத்து சொல்லி வருகையில், அதனால் ஈர்க்கப்பட்டு, பல அன்பர்கள் சத்சங்கத்தில் வந்து சேர்வர். இதனால், ப்ரேமிகவரத கோவிந்தனுக்கு ஆட்பட்ட குடும்பமானது பெரிதாகிக்கொண்டே போகிறது.

அப்படி வந்தவர்கள்தான் திரு.பாலாஜி, திருமதி.சந்தியா தம்பதிகள். அமெரிக்காவில் வாழ்ந்து வந்த தம்பதிகள், 2013ஆம் வருடம் அட்லாண்டாவில் நடந்த நமது சத்சங்கத்தில்தான், அட்லாண்டா சத்சங்க அன்பர் நாராயணன் மூலமாக முதன்முறையாக கலந்து கொண்டனர். அது முதல் நாம ஸ்மரணையும், குருநாதர் நினைவும் அவர்கள் வாழ்வில் ஒன்றாக இணைந்து, குருநாதரை நேரில் தரிசிக்க வேண்டும் என்ற ஆசையும் வளர்ந்து கொண்டே வந்தது.

அப்பொழுது, சந்தியாவிற்கு உறவினர் வீட்டில், விசேஷம் சம்பந்தமாக இந்தியாவிற்கு வர ஒரு வாய்ப்பு அமைந்தது. அதற்காக சென்னை வந்த சந்தியாவிற்கு எப்படியாவது குருநாதரை தரிசிக்க வேண்டும் என்ற ஆசை மேலோங்கி இருந்தது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சென்னையில் இருக்கிறார்

என தெரிந்தவுடன், பெற்றொருடன் ப்ரேமிக பவனம் வந்து, ஸ்ரீஸ்வாமிஜியை தரிசித்தார். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜியிடம், கவலை ஒன்றை சந்தியாவின் பெற்றோர் தெரிவித்தனர். திருமணமாகி சில வருடமாகியும், சந்தியாவிற்கு ஒரு மழலை பிறக்கவில்லை என்பதே அக்கவலை. கருணையே வடிவான குருநாதர், சீக்கிரமே குழந்தை பிறக்கட்டும் என சந்தியாவிடம் சொல்லி, ஒரு பழமும் தந்து அருளினார்கள்.

குடும்பம் என்றால் குழந்தை இருந்தால்தான் முழுமை என தம்பதிகள் நினைப்பர். அதிலும் சத்சங்கத்தில் உள்ளோருக்கு, தாம் செய்து வரும் கைங்கரியத்தை தொடர்ந்து செய்ய சந்ததி வேண்டும் என ஆசைப்படுவர். அப்படி பாலாஜி தம்பதிகளும் ஆசைப்பட்டதில் ஆச்சரியம் இல்லை.

ஆனால் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை தரிசித்தவுடன் குருநாதரின் எளிமை, கம்பீரம், குளிர்ந்த தீர்க்கமான பார்வை, கருணையான பேச்சு எல்லாம் தங்கள் கவலையை மறக்கடித்து விட்டது என சந்தியா சொல்வார். சில நாட்களில் பாலாஜியும் அமெரிக்காவிலிருந்து வர, சில நாட்கள் கழித்து மதுரபுரியில் நடந்த வசந்தோத்ஸவத்தில், பாலாஜியும் குடும்பத்தாருடன் வந்து கலந்து கொண்டார். அந்த உத்ஸவத்தில் விதவித புஷ்பாலங்காரங்களில் ப்ரேமிகவரதன் இருந்ததும், ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்ற கீர்த்தனமும் அவர்கள் மனதை அப்படியே கொள்ளை கொண்டது.

மதுரபுரி ஆஸ்ரமத்தில் ப்ரேமிகவரதனின் சன்னதியில், பத்து வருடங்களாக அகண்டமாக நாமகீர்த்தனம் நடைபெற்று வருகிறது. அங்கு வந்து குருநாதர் மற்றும் ப்ரேமிக வரதன் சன்னதியில், நாமகீர்த்தனம் செய்பவர்களுக்கு ஆச்சரியமான கைகூடாத விஷயங்கள் கூட கைகூடுகிறதென்று தெரிகிறது. ப்ரேமிக வரதன் அவன் சன்னதிக்கு வந்து செல்பவர்களை வெறு கையுடன் அனுப்புவதில்லை; இது வெறும் motivationஇற்காக சொல்லப்படுவதல்ல; அது பகவானின் assuranceஉம் ஆகிறது அல்லவா!

நடுவில், அவ்வப்பொழுது குருநாதரின் கருணைப் பார்வைக்கு இலக்காகையில் எல்லாம், 'நம் கவலை தீரும்; குருநாதர் அருளி இருக்கிறார்; கவலைப்பட வேண்டியதில்லை' என பாலாஜிக்கு தோன்றும். ஸ்ரீஸ்வாமிஜியின் தரிசனம் அடிக்கடி

கிடைத்து வந்ததால் நாமகீர்த்தனம், சப்தாஹ பாராயணம், கதை கேட்பது என நிறைய சத்சங்கங்களில் கலந்து கொள்ள வாய்ப்பும், அதில் மேலும் அதிக ஈடுபாடும் தம்பதிகளுக்கு ஏற்பட்டு வந்தது.

குருநாதர் ஆசியும் உத்திரவும் பெற்று, மறுபடி அமெரிக்கா வந்த பிறகும் அட்லாண்டாவில் தொடர்ந்து விடாமல் சத்சங்கங்களில் கலந்து கொண்டு வந்தனர். தினமும் தவறாது குருநாதர் திருவுருவ படத்திற்கு தூப உபசாரம் செய்து, நாமகீர்த்தனத்துடன் பிரார்த்தனையும் செய்து வந்தனர். அவர்களது நம்பிக்கை மேலும் திடமாகிக்கொண்டே வந்தது. ராமுஜியின் பாகவத சப்தாஹமும் க்ருஷ்ண ஜனன பிரவசனமும், பூர்ணிமாஜியின் ராமாயண பாராயணமும் பிரவசனமும் அவர்கள் வீட்டில் நிகழ்ந்தது. டிசம்பர் 2015இல் ராமுஜி அவர் வீட்டிற்கு மறுபடி வந்தபொழுது, குருநாதர் அவர் மூலமாக, குழந்தை நிச்சயம் பிறக்கும் என்பதை மறுபடி சொல்லி அனுப்பி நம்பிக்கையுடன் இருக்க செய்தார்கள்.


இந்த ஜனவரி 2016இல் சந்தியாவிற்கு ஸ்கேன் செய்தபொழுது, குழந்தை உண்டாகி இருப்பது உறுதியானது. அது தம்பதியினருக்கும் அவர் பெற்றோருக்கும் இனிமையான செய்தியாக அமைந்ததில் ஆச்சரியம் இல்லை!

அட்லாண்டா ஹனுமான் மந்திரில் சமீபத்தில், மதுரகீத சப்தாஹம் நடைபெற்றது. இதில் குருநாதரின் கீர்த்தனங்களை பல அன்பர்கள் பாடினர். அதில் சந்தியாவும் கலந்து கொண்டு பாடினார்.

குருவருள் கூடினால், நினைவுகள் மதுரமாய் இனிக்கும் என்பது, நாம் புரிந்து கொள்ள கூடியதே!

## தங்களின் கவனத்திற்கு – முக்கிய அறிவிப்பு

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் இயங்கும் டிரஸ்டுகளின் நிர்வாக அலுவலகம் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. புதிய முகவரி: **Plot no. 11, Door No 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83.** அனைத்து தொடர்புகளையும் இம்முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பணிவன்புடன் கேட்டு கொள்கிறோம்.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: தியானம் செய்யும்பொழுது, மனதில் தொடர்ந்து கடலில் அலைகள் போல், அடுத்தடுத்து வந்து கொண்டிருக்கும் எண்ணங்களை எப்படி கட்டுப்படுத்துவது?

பதில்: மருத்துவர் நம்மை ஸ்வீட் சாப்பிடாதே என்கின்றார். நாம் உடனே மருத்துவரை பார்த்து, ஏன் ஸ்வீட் சாப்பிட கூடாது என்று கேட்கின்றோம். உடனே, உங்களுடைய உடலில் sugar Level அதிகமாக இருக்கின்றது என்கிறார். அடுத்ததாக sugar அதிகமாக ஆனால் என்ன? என்று கேட்போம். அவர் கண்பார்வை, ஹிருதயம், கிட்னி எல்லாம் பாதிக்கும் என்றும், அதனால் வரும் ஆபத்துக்களை எல்லாம், ஒன்று ஒன்றாக எடுத்து சொல்கின்றார். அதனால் convince ஆன நாம், இனிப்பு பண்டங்களை உண்பதற்கு தயங்கி, பிறகு குறைத்துக்கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக complete ஆக avoid செய்கின்றோம்.

அதுபோல் நம்முடைய மனதில், அடுத்து அடுத்து எண்ணங்கள் வரும்பொழுது, அவைகளை அப்படியே தள்ள முயற்சிக்க கூடாது. அதற்கு பதிலாக, இந்த எண்ணம் எங்கிருந்து கிளம்பியது, இந்த சிந்தனை, எப்பொழுது எப்படி மனதில் பதிந்தது, இதை சிந்திப்பதால் என்ன பயன், யாருக்கு வந்தது, ஏன் வந்தது என்று தீர விசாரித்தோமானால், அந்த எண்ணம் விலகி விடும். மீண்டும் நம்முடைய மனதில் உதயமாகாமலும் இருக்கும். இப்படித்தான், மனதில் வரும் எண்ணங்களை, ஒன்றன் பின் ஒன்றாக களைய வேண்டும்.

கேள்வி: பகவானை ஒருவர் அடைய வேண்டும் என்ற ஆசை தீவிரமாக வர, உலகத்தை பார்த்து நன்றாக பயம் வர வேண்டுமா? சித்தார்த்தருக்கு மரணம், மூப்பு, வியாதியை பார்த்து பயம் வந்தது. பகவான் ரமணருக்கு, தந்தையின் மரணத்தை கண்டு, மரணத்தை பற்றிய பயம் எழுந்தது. ஆகவே முக்தியை அடைவதில், ஸம்ஸாரத்தின் அநித்யத்தை கண்டு பயம் வரவேண்டிய அவசியம் இல்லையா?

பதில்: ஒருவருக்கு ஸம்ஸாரத்தில் பயம் இருந்தால், அதனையே

**முக்தியை அடைய ஒரு யுக்தியாக பயன்படுத்தி கொள்ளலாம். ஹிருதயத்தில் ஸர்வ ஜீவராசிகளிடமும் அன்பு பொங்கி வழிந்தால், அந்த அன்பையே பகவானிடம் கொண்டு அதையே** முக்தி சாதனமாக பயன்படுத்தி கொள்ளலாம். மனது இயற்கையாகவே லயம் ஏற்படுமானால், அந்த லயத்தை பகவானிடம் அடைந்து, முக்தியை அடைவதற்கு சாதனமாக பயன்படுத்தி கொள்ளலாம். இப்படியாக துக்கம், வெறுப்பு, எல்லாவற்றையுமே முக்திக்கு உபாயமாக கைக்கொள்ளலாம். அதனால் அது அது அவர்களுடைய இயல்பை பொறுத்த விஷயமாகும்.

*__ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களின் சிந்தனை மலர்கள்__*

* *என்னிடம் பலர் வந்து என்னுடைய தாயார் மற்ற பிள்ளைகளிடம் ஆசையாக உள்ளார்; என்னிடம் ஆசையாகவே இருப்பதில்லை என்று வருத்தப்படுவார்கள். சிலர், என் கணவர் என்னிடம் ஆசையாகவே இருப்பதில்லை என்று வருத்தப்படுவார்கள். அதுபோல் சிலர் என்னிடம், என் குழந்தைகள் ஆசையாகவே இருப்பதில்லை; என்று இப்படியாக பலர் பலவிதமாக கூறுவார்கள். இவைகளை எல்லாம் கேட்ட நான் பிரேமிக வரதனிடம் ஓடிச்சென்று,* ***"என்னை எப்பொழுதும் உன்னுடைய செல்ல பிள்ளையாக வைத்துக்கொள்"*** *என்று பிரார்த்தனை செய்தேன்.*

* *கெட்டவனை விட முட்டாள்தான் அதிக பிரச்னைகளை எதிர்கொள்வான்.*

* *பணம் படைத்தவர்கள் தங்களுக்கு தேவை இல்லை என்று தூக்கி போட்ட பொருள்களை எல்லாம், ஏழைகள் தாங்கள் உபயோகப்படுத்தி மகிழ்ச்சி அடைகின்றார்கள். அதுபோல், ஞானி, 'மித்யை' என்று தள்ளிய பிரபஞ்சத்தை, ஞானமில்லாதவர்கள் பரம சுகமாக அனுபவிக்கின்றார்கள்.*

*- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜீ*

# தாமோதரன் என்னும் பெருமாயன்

குட்டி கண்ணனை கவனிக்காமல் யசோதை தன் வேலைகளை செய்ததால், கோபம் கொண்ட குட்டி கண்ணன் தயிர் பானைகளை உடைத்தான். யசோதை கண்ணனை உரலுடன் கட்டி போட்டாள். பூர்ண ப்ரும்மமான கண்ணபிரானை, ஒரு கோபி அனாயசமாக கட்டி போட்டு விட்டாளே என்று அதிசயிக்காத மஹான்களே கிடையாது!

கட்டி போடப்பட்ட கண்ணன் சும்மா இருந்தானா என்ன? ப்ருந்தாவனத்தில் நாரதரின் சாபத்தால் நளகூபரன், மணிக்ரீவன் என்ற இரு குபேர புத்திரர்கள், இரு அர்ஜுன மரங்களாக பிறவி எடுத்திருந்தனர். பகவான் கண்ணனின் திருவருளால் இருவருக்கும் விமோசனம் என நாரதர் சொல்லி இருந்தார். அதற்கான நேரமிது. நாரதர் சொன்னதை மெய்ப்பிக்க வேண்டுமே! அந்த உரலை, அந்த இரு மரங்களுக்கிடையே ஓட்டி சென்று இடித்தான் கண்ணன். மறுகணம் குபேர புத்ரர்கள் சாப விமோசனம் பெற்றனர் என்பது கதை. இது குறித்து நம் குருநாதர் பேச்சுவாக்கில் சொன்ன சில ரசமான விஷயங்களை, இப்பொழுது பார்ப்போமா?

பகவான் ஏன் உரலை இழுத்து கொண்டு, மரங்களை நோக்கி ஓட்டினான்? உரல் மரத்தால் ஆனது. உரல் தனியாக பயன்படாது. அதில் போட்டு இடிக்க உலக்கை வேண்டும். அந்த உலக்கையும் மரத்தால்தானே ஆனது. ஆதலால் உலக்கை வேண்டுமென்று மரங்களை முறித்தானோ!

கண்ணனின் முக்கியமான அவதார காரியங்களில் ஒன்று அவன் அர்ஜுனனுக்கு சாரத்யம் செய்தது. அதையும் அவன் இரு சக்கரங்களை கொண்ட தேரை ஓட்டி கொண்டல்லவா செய்தான்? செய்ததோ அர்ஜுனனுக்கு! இங்கு முன்னே இருப்பது அர்ஜுன மரங்கள். மாட்டி கொண்டு இருப்பதோ இரு சக்கரம் போன்ற உரல். பிறகு செய்ய போகும் பார்த்தசாரதி லீலைக்கு, இப்பொழுதே ஒப்பனை செய்ய ஓடினானோ?

குழந்தை பயந்து உரலை இழுத்துக்கொண்டு ஓடினான் என சொல்வது பொருத்தமே இல்லை. ஏனெனில், அப்படி பயந்து கொண்டு சென்றால், எங்காவது மரங்களுக்கு இடையில் செல்லுமோ? தடை இல்லாத இடங்களை நோக்கித்தானே கால்கள் செல்லும்? இவனோ, அந்த மரங்களை இடிப்பதற்காகவே செல்கிறான்! ஆக அவனுக்கு பயம் என்பதே இல்லை என்பதை காண்பிக்கவே, இப்படி விநோதமாக சிறு குழந்தையாக இருக்கையிலேயே, கட்டுண்ணப்பட்ட போதும் செய்து காண்பித்தானோ!

மேலும் உரலில் இடிபடும் தானியங்கள் பக்குவமாகித்தான் வெளி வரும் அல்லவா? இடிபட்டால், தவிடு தனியாகவும், தானியம் தனியாகவும் போய் விடும். சாரம், சக்கை என பிரிந்து விடும். இங்கேயும் கண்ணன் தனது உரலில் இரு மரங்களை இடித்தான். அம்மரங்களின் சாபங்கள் உடனே நீங்கி, அவர்களின் உள்ளே இருந்த நிஜ ஸ்வரூபம் வெளிப்பட்டன! ஆக நாரதர் சாபத்தால், பக்குவமான உள்ளங்களை, கட்டிலிருந்து விடுவிக்க, கண்ணன் உரலை கட்டிக் கொண்டு வந்தானோ!

பொதுவாக அரச மரம், வேப்ப மரம், தர்ப்பை எல்லாம் தெய்வ சான்னித்யம் உள்ள தாவரங்களாக சொல்கிறோம். பின்னாளில் விஞ்ஞானிகள், ஒவ்வொரு தாவரத்திற்கும் உணர்வுகள் உண்டு என ஆதாரமுடன் கண்டுபிடித்தார்கள். பகவான் கண்ணனோ, ஒவ்வொரு தாவரத்திலும் ஒரு தேவதை வாசம் செய்கிறது என்பதை நிரூபிக்கவே, மரத்தை இடித்து, யக்ஷர்களை காட்டி, இப்படி ஒரு லீலையை செய்தானோ?


**To—All SubScribers**

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை மின்னஞ்சல் Email, குறுந்தகவல் SMS அல்லது தொலைபேசி மூலமாக தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**Email : helpdesk@madhuramurali.org**

**Phone : "24895875" SMS : 9790707830**

# சுத்த ப்ரேமிக வித்யா கேந்திரம்

**ஏப்ரல் 14 -** சித்திரை முதல் நாள் தமிழ் புத்தாண்டு தினத்தன்று, சேங்கனூர் ஸ்ரீப்ரேமிக ஜன்மஸ்தானில், நம் ஸத்குருநாதர், பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி மஹாராஜ் அவர்கள், 'சுத்த ப்ரேமிக வித்யா கேந்திரம்' பாடசாலையை துவக்கி வைத்தார்கள். இதில், ஸ்ரீசாந்தீபனி குருகுல பாடசாலையை சேர்ந்த வித்யார்த்திகள், முதல் வித்யார்த்திகளாக சேர்ந்துள்ளனர்.

'எந்த குருவானவர் சந்தோஷமடைந்தால், பகவான், தன்னையே பிரசாதமாக முழுமையாக தந்து விடுகிறானோ அந்த சத்குருவின் திருவடிகளுக்கு நமஸ்காரம்' என்ற பொருள்படும் ஸ்லோகத்தை, ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி மஹாராஜ் அவர்கள், எல்லோரையும் சொல்ல சொல்லி துவக்கி வைத்தார்கள்.

'அந்த காலத்தில் பாடசாலைகளில், ராஜகுமாரன் என்றோ அல்லது இவன் அசுரகுமாரன் என்றோ வித்யாசம் பார்க்காமல், எல்லா வித்யார்த்திகளையும் ஒரே சமமாக பாரபட்சமின்றி, தெய்வத்தையே ப்ரத்யக்ஷமாய் பார்த்த குருநாதர்கள் பாடசாலையை நடத்தினார்கள். இது நமது தேசத்தின் பெருமை. தக்ஷிணாமூர்த்தி எல்லோருக்கும் குரு ஆவார். இந்த சுத்த ப்ரேமிக வித்யா கேந்திரம் ஆகம பாடசாலையோ அல்லது வேதபாடசாலையோ அல்ல; இந்த பாடசாலையில் ஸ்ரீப்ரேமிக வித்யை மட்டுமே கற்று தரப்படும் என நமது ஸ்ரீஸ்வாமிஜி முடிவு செய்துள்ளார். இதில் படிக்கும் வித்யார்த்திகள், நாளை மிக அருமையாக பகவத்குணம் சொல்லி க்ருஷ்ணப்ரேமைக்கு பாத்திரம் ஆவார்கள்; அவர்களின் தேவையை பெருமாளே பார்த்து கொள்வான். பள்ளிப்படிப்பில் இருக்கிறவர்களில் இருந்து, பல்கலைக்கழகம் படிக்கிறவர் வரை, யார் வேண்டுமானாலும் இங்கு சேரலாம்' என்றும், ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி மஹாராஜ் அவர்கள் அருளி செய்தார்கள்.

# *பக்தியில்லாமல் ஞானமில்லை*

- ஶ்ரீராமானுஜம்

ஶ்ரீமத் பாகவதத்தில், ப்ரும்மா பகவானை ஸ்துதி செய்யும்பொழுது, உன்னிடம் பக்தி இல்லாமல், ஒருவர் ஞானத்திற்கு பிரயாசைப்படுவது, அரிசி வரும் என்று நினைத்துக்கொண்டு, நெல் பதரை ஒருவர் அரைப்பது (குத்துவது) போன்றது என்கிறார்.

எந்த ஒரு விஷயத்தையும், அறிவு பூர்வமாக தெரிந்து கொள்வது என்பது வேறு. அனுபவத்தில் தெரிந்து கொள்வது என்பது வேறு. தேன் மதுரமாக இருக்கும் என்று, ஒருவனுக்கு நன்றாக தெரியும். ஆனால் இதுநாள் வரை, தேனை சுவைத்ததில்லை என்றால், அதன் மதுரம் எப்படி இருக்கும் என்று, அனுபவத்தில் பிரத்யக்ஷமாக உணர முடியாது.

அதோடு மட்டும் அல்லாமல், ஒருவர் தேன் எப்படி இருக்கும்? இது சுத்தமான கலப்படமில்லாத தேன்தான் என்று சந்தேகத்துக்கு இடமின்றி, தெரிந்து கொள்ள வேண்டும். தேன் அல்லாத அதை போன்ற ஒரு பொருளை பார்த்து, விபரீத ஞானம் ஏற்பட்டு, அதை சுவைத்து விட்டால் ஆபத்துதான்.

அதுபோல், ஞான சாதனையை, பகவானிடம் பக்தி இல்லாமல் செய்ய ஆரம்பித்தால், ஞானம் விபரீத ஞானமாக ஆகி விடத்தான் வாய்ப்புகள் அதிகம். ஏன்? ஞான விசாரம் என்பது கேள்விகளால் அறிவை தூண்டி, பிரகாசம் அடைய செய்வது. பக்தி என்பது பக்தி சாதனங்களால், மனதை நெகிழச்செய்வது. அதன் மூலம் ராஜஸ, தாமஸ வாசனைகள் அழிந்து லோகாயதமான சத்வமும் அழிந்து, சித்த பகவத் விஷயமான சாத்வீகத்தை ஸ்திரப்படுத்தி கொள்ள வேண்டியதுதான்.

நேரடியாக அறிவை தூண்டி, ஞான சாதனைகளில் ஈடுபடும்பொழுது பல பிறவிகளாக தொடர்ந்து வரும் ஜடத்தன்மை, குதர்க்கம், விபரீதம், சந்தேகம் இவை போன்ற சம்ஸ்காரங்களே நம் உடலில் உள்ள 72000நாடிகளிலும்

நிறைந்துள்ளதால், அவைகளே தலை தூக்கும். அதன் மூலம் ஞானம் சித்திக்காதது மட்டும் அல்லாமல், விபரீத ஞானம் ஆகவும் ஆகி விடும். நன்றாக படித்த அறிவாளியான ஒருவன் புத்திசாலித்தனமாக குற்றம் புரிவது போல ஆகும்.

ஆனால் பக்தி செய்வதால், நாடிகளில் ஏறி இருக்கும் அழுக்கான, ஆபத்தான, விபரீதமான வாசனைகள் எல்லாம் காலக்ரமத்தில் சிறிது சிறிதாக அழிவதால், அதனுடன் ஞானப்ரயாசை ஏற்படுமானால், அது சந்தேகமில்லாத அபரோக்ஷ அனுபூதியாக தானே பிரகாசிக்கும்.

* *பொதுவாக நாம் தியானம் செய்ய அமரும்பொழுது, மனதில் பலவிதமான எண்ணங்கள் எழும். சமீபத்தில் நாம் பார்த்த அழகிய காட்சியோ நம்மை பாதித்த விஷயமோ, நமக்கு நினைவுக்கு வருவது ஆச்சரியமில்லை. ஆனால், சம்பந்தமில்லாத பல எண்ணங்கள், பழைய நினைவுகள் எல்லாம் கூட, சில சமயங்களில் நமது மனதில் எழுவதை நாம் கவனிக்கலாம். இதற்கு வாசனைகள் மட்டுமேதான் காரணம் என்று கூற முடியாது. ஏனென்றால், கோடிக்கணக்கான வாசனைகள் இருக்கும்பொழுது, சில எண்ணங்கள் மாத்திரம் ஏன் எழ வேண்டும்? இதற்கெல்லாம் காரணம் நமது மனதில், சில* pressure points *உள்ளன. பாசம், அவமானம், தற்பெருமை போன்றவை அவற்றில் சில. என்றோ நடந்த நமது உறவினர் கல்யாணம், சிலருக்கு நாம் கொடுத்த தகுந்த பதிலடி* (nose cut), *சிலர் நம்மை கூறிய கடுஞ்சொற்கள் போன்றவை எவ்வித காரணமுமின்றி, திடீரென்று நம் நினைவுக்கு வரும். இவைகளுக்கு எவ்வித தூண்டுதலும் தேவையேயில்லை. காரணம், மனதில் இவைகள்* pressure points *ஆக உள்ளதுதான்.*

*–மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி*

# பிறவிகளிலிருந்து முக்தி - அவசியம்

-ஸ்ரீஸ்வாமிஜி

மனிதர்களில் பலர், நான் என்னுடைய வாழ்க்கையில் வெளிநாடு சென்றிருந்தேன். அங்கு ஒரு பூங்காவை பார்த்தேன் அல்லது ஒரு கட்டிடத்தை பார்த்தேன் அல்லது ஒரு நிகழ்ச்சியை பார்த்தேன்; என்னால், வாழ்க்கையில் அதை மறக்கவே முடியாது என்பார்கள். சிலருக்கு, தாங்கள் சாப்பிட்ட சில உணவின் சுவையை, வாழ்நாளில் மறக்க முடியாது என்பார்கள். சிலரோ, நான் மிக அருமையான சங்கீதம் கேட்டேன்; மறக்கவே முடியாது என்பார்கள். சிலர், நான் ஒரு கோடை வாசல் இடத்திற்கு சென்றேன். அங்கிருந்த இயற்கை காட்சிகளும் climateஉம், என்னால் மறக்கவே முடியாது என்பார்கள்.

இப்படி, ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் தாங்கள் பார்த்த அல்லது கேட்ட அல்லது சுவைத்த அல்லது உணர்ந்த விஷயத்தை, மறக்கவே முடியாத அளவிற்கு, அவர்கள் மனதில் பதிந்து விடுகிறது. அதைப்பற்றி, அவர்கள் அடிக்கடி சிந்தனை செய்தும், பிறரோடு பகிர்ந்து கொண்டும் சந்தோஷப்படுவார்கள்.

ஒருசமயம் காஞ்சி பெரியவர், ‘நான் ஒரு கிராமத்து வழியாக சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு குழந்தை, தன்னுடைய சின்ன தம்பியை பொய் சொல்லலாமா என்று திட்டி கொண்டே நன்றாக அடித்து கொண்டிருந்தது. வாழ்க்கையில் பொய் சொல்லலாமா? சத்தியம்தானே முக்கியம் என்று மிரட்டி கொண்டிருந்தது’ என்று கூறி, இதை என்னால் என் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியவில்லை என்றார். ‘இச்சிறுமிக்கு சத்தியத்தில் இருக்கும் நிஷ்டை நம்பிக்கை எனக்கு வர வேண்டும் என்று நினைத்து கொண்டேன்’ என்று பெரியவர் கூறுவார்.

ஒருமுறை, பாலக்காட்டருகே பெரியவா camp

செய்திருந்த போது, அங்கு பெரியவாளை தரிசனம் செய்ய வந்திருந்த ஒருவர், தனக்கு பூஜைக்கு நேரமாகி விட்டது என்று கூறி கிளம்பி சென்றார். சிறிது நேரத்திற்கெல்லாம், அவர் மீண்டும் பெரியவாளிடமே வந்து விட்டார். ‘பூஜை செய்ய சென்றாயே! ஏன் திரும்பி விட்டாய்?’ என்று பெரியவா அவரை கேட்க, அதற்கு அவர், ‘பெரியவா! பூஜையில் மனது ஈடுபடவில்லை. அதான் வேண்டாமென்று வந்து விட்டேன்’ என்று கூறினார். இதிலிருந்து, மனது ஈடுபடாத ஒரு பூஜையை செய்யவே வேண்டாம் என்று தெரிந்து கொண்டேன் என்று பெரியவா கூறுவார். இதை என்றும் நான் மறவேன் என்றும் கூறுவார்.

இதேபோல், வாழ்க்கையில் நானும் பல சம்பவங்களை பல விஷயங்களை பார்த்தும் கேட்டும் அனுபவித்தும் இருந்தாலும், சிலவற்றை மறப்பதற்கு நான் தயாராக இல்லை.

ஒருமுறை நான் ஒரு கிராமத்தில் ஒரு வீட்டிற்கு சென்றிருந்தேன். மாவிலை தோரணங்கள் கட்டி, பெரிய கோலங்களிட்டு, பூர்ண கும்பத்துடனும் பெரிய வரவேற்பு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த வீட்டில் அவர்கள், ‘என்னுடைய குலதெய்வத்தின் கோவில் ஒன்றிருக்கிறது. அதற்கு கும்பாபிஷேகம் ஆக வேண்டும்; அது பூஜையில்லாமல் இருக்கிறது’ என்றார்கள். அந்த வீட்டிலுள்ள ஒரு இளைஞனுக்கு திருமணத்திற்கு நல்ல பெண் சீக்கிரம் அடைய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவ்வீட்டின் பெண்ணிற்கு குழந்தை பிறக்க வேண்டுமென்று கவலைப் பட்டார்கள். பின் பலவிதமான உபசாரங்கள் செய்தார்கள்.

பின் நான் அந்த வீட்டிலுள்ளவர்களிடம், ‘உங்களது பெற்றோர்கள் இருக்கின்றனரா’ என்று கேட்டேன். அதற்கு அவர், ‘அப்பா இல்லை; அம்மா மட்டும்தான் இருக்கிறார்’ என்றார். அவரை பார்க்க, என்னை உள்ளே ஒரு அறைக்கு அழைத்து சென்றார்கள். அந்த தாயார், மிகவும் வயதான மூதாட்டியாக இருந்தார். அவர் உடம்பில் வஸ்திரம் எதுவுமே இல்லை. உடம்பில் எல்லாம் ஈ மொய்த்து கொண்டிருந்தது. தரை எல்லாம் பினாயில் போட்டிருந்தார்கள். ஒருபக்கம் அந்த

அம்மாவை பார்க்க, எனக்கு மிகவும் வேதனையாகவும் கவலையாகவும் இருந்தது. மறுபக்கம் இந்த மக்களின் இயல்பை பார்த்து, வேடிக்கையாகவும் இருந்தது.

ஸ்ரீமத் பாகவதத்திலே, கபில வாசுதேவர் தன் தாயான தேவஹூதியிடம் வயதானவர்களை வீட்டில், 'க்ருஹபாலவத்' அதாவது ஒரு நாயை போல் வைத்திருப்பார்கள் என்று கூறியிருப்பதுதான் ஞாபகத்திற்கு வந்தது. இந்த காட்சியை என்றென்றும் நான் மறக்கவே கூடாது என்று எண்ணினேன். ஏனென்றால், ஜரை என்பது எப்படிப்பட்டது என்பதையும் வைராக்யத்தை திடப்படுத்தி கொள்ளவும் இந்த சிந்தனை உதவும் என்றெண்ணினேன். இது நான் பார்த்த ஒரு நிகழ்ச்சி.

அதுபோலவே, எனக்கு தெரிந்து ஒருவர் புற்று நோய்க்காக அடையார் கேன்சர் ஆஸ்பத்திரியில், சிகிச்சை பெற்று கொண்டிருந்தார். நான் அவரை பார்க்க சென்றிருந்தேன். அப்பொழுது அங்கு ஒரு சிறுவனை பார்த்தேன். அவனுக்கு காதில் புற்று நோய். சிலருக்கு வாயில், சிலருக்கு நாவில் புற்று நோய் என்று சிறு குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை, பலர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு, அங்கு வந்து சிகிச்சை பெறுவதை நான் பார்த்தேன். அவர்கள் எல்லோரும் எடுத்து கொள்ள கூடிய treatment chemotherapy, radiation போன்றவை, இந்த வயதிலே மிகவும் கொடூரமானது என்றால், அதற்கான சிகிச்சை அதை விடவும் painful ஆகவும் கொடூரமானதாகவும் இருக்கிறது என்பதை பார்த்தேன். மேலும் இந்த வியாதி வந்தவர்களுக்கு, இன்னும் வாழ்க்கை சில நாட்களே என்றபடி மரணத்தை எதிர்பார்த்து கொண்டிருக்கும்படியான ஒரு பயங்கர நிலை. இவையெல்லாம், என் மனதில் நிலைத்து நின்றது. இக்காட்சிகளையும் நான் மறக்க விரும்பவில்லை. என்றுமே இதை என் சிந்தனையில் வைத்துக்கொள்ளவே ஆசைப்படுகிறேன்.

அதே போல் ஒருமுறை, நான் விபத்தில் அடிபட்ட ஒரு இளைஞனை பார்க்க சென்றேன். இருபது வருடங்களாக

அவன் கோமாவில் இருப்பதாக கூறினார்கள். இதையும் நான் என்றும் நினைவில் நிறுத்திக்கொள்ள விரும்பினேன்.

மரணம் நடந்த வீட்டிற்கு சென்றதையோ, அல்லது தீயிற்கு இரையாகும் மயானத்திற்கு சென்று, அங்கு இத்தனை நாள் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என்று இருந்த ஒரு சரீரம், தீயிற்கு இரையாகும் காட்சியையும் நான் மறக்க விரும்பேன். இதுநாள் வரை, ஒரு முள் குத்தினாலோ அல்லது ஒரு சிறு ஊதுவத்தி பட்டாலோ கூட தாங்காத உடம்பு இன்று அக்னி ஜ்வாலையால் எரியூட்டப்பட்ட போதிலும், ஒன்றும் தெரியாமல் கிடப்பதை பார்த்து, இதுதான் நம்முடைய சரீரத்திற்கும் கதி, முடிவு என்று நினைவில் இருத்த, இந்த காட்சிகளையும் நான் மறக்க விரும்பேன்.

சிலர் சில பிரச்னைகளில் சிக்கிக்கொண்டு, வாழ்நாள் முழுவதும், அந்த சிக்கலிலிருந்து வெளிவருவதற்காகவே, ஒவ்வொரு செயலையும் செய்ய வேண்டியிருப்பதையும் காண்கிறேன். இன்று பெரிய நிலையில் இருப்பவர்கள், நாளை சாதாரண நிலைக்கு செல்வதையும், சாதாரண நிலையில் இருப்பவர்கள் பெரிய நிலைக்கு செல்வதையும் பார்க்கிறேன். இதை எல்லாம் பார்க்கும்பொழுது, வாழ்க்கையில் எதுவுமே நிலையில்லை என்று தெளிவாக இருக்கிறது.

ஜரை, மரணம், வியாதி, துக்கம், விபத்து போன்ற காட்சிகளையே நான் என்றும் நினைவில் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், நாம் பார்த்த இனிமையான காட்சிகளை எல்லாம் நினைவில் வைத்து கொண்டு சிந்தனை செய்தால், ஒரு பிரயோஜனமும் இல்லை. இதுபோன்ற காட்சிகளை நினைத்தால் மட்டுமே, வைராக்யம் ஏற்படும்.

இவைகளில் எல்லாமோ அல்லது சிலதோ, நமக்கு வாழ்க்கையில் வரலாம் அல்லது வராமலும் போகலாம். நாளை நம் நிலை என்ன என்று தெரியாது. ஆதலால், இன்று நான் எல்லாவிதத்திலும் நன்றாக இருக்கும்போதே, இவைகளில் ஒன்று நமக்கு வந்தாலும், அதனால் பாதிப்படையாத ஒரு நிலையான ஜீவன்முக்தி நிலையை அடைய ஒவ்வொரு க்ஷணமும் நாம் பாடுபட வேண்டும்.

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் சிந்தனை மலர்கள்

* நிர்குணமான உபாசனை செய்பவர்களுக்கு, அவர்கள் உள்ளே இருக்கும் பரமாத்மா ஸ்வரூபமே துணை இருந்து வழிகாட்டி ஆத்ம ஞானத்தை அடைய உதவி செய்யும்.

* மனது பஹிர்முகப்படும்பொழுது, ஞான இந்திரியங்களின் மூலம், அதனதன் அபிமானி தேவதைகளின் துணைக் கொண்டுதான் பஹிர்முகப்படுகின்றது. ஆனால், மனது அந்தர்முகப்படுவதற்கு ஞான இந்திரியங்களின் உதவியோ அதனதன் அபிமானி தேவதைகளின் உதவியோ தேவை இல்லை. மனதின் உற்பத்தி இடத்திலேயே, ஒடுக்கினாலே போதும்.

* தியானம் வெகுநேரம் செய்யும்பொழுது, கால்களில் வலி ஏற்பட்டு எழுந்திருக்க வேண்டும் என்று தோன்றும். அப்பொழுது சரீரம் எப்படி எழுந்திருக்க ஆரம்பிக்கின்றது என்பதை நன்றாக கவனி; மனதில் எண்ணம் வருகின்றது; பிராணன் மூலமாக, ஞான இந்திரியங்களும் கர்ம இந்திரியங்களும் எப்படி வேலை செய்கின்றது என்பதை நன்றாக ஆழ்ந்து கவனிக்க முயலவும்.

* எண்ணங்கள் எழும்போது, அது யாருக்கு எழுகின்றது என்று கேள்வி கேட்டால், எனக்கு என்று வரும். உடனே 'நான் யார்' என்று விசாரம் செய்ய வேண்டும். இப்படி விசாரம் செய்யும்பொழுது கவனித்தால், நாம் இருக்கும் சூழ்நிலையில் உள்ள ஒளி, ஒலி, வாசனை மற்றும் தட்ப, வெப்ப நிலைகளை நாம் எப்பொழுதும் உணர்ந்து கொண்டே இருப்போம். அவைகளை எது உணருகின்றதோ, அதுவே உண்மையான 'நான்' அது ஆகும்.

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Ltd

## ரூப கோஸ்வாமி

– ஜனனி

ஸ்ரீரூப கோஸ்வாமி, ஸ்ரீஸனாதனருடைய இளைய சகோதரர் ஆவார். ஸனாதனரை விட வயதில் இரண்டு வருடங்கள் சிறியவராக இருந்தபோதிலும், மஹாப்ரபுவின் க்ருபைக்கு முதலில் பாத்திரர் ஆனதால், வைஷ்ணவ ஸமூஹத்தில் இவரையே மூத்தவராக கருதுகிறார்கள்.

ராம்கேளி எனும் இடத்தில், மஹாப்ரபுவை தரிசனம் செய்த பின் இவர்கள் வாழ்க்கை எப்படி மாறியது என்று முன்பே சொன்னோம். அதன் பிறகு தான் ஸனாதனர் சிறைப்படுத்தப்பட்டார், பின் அங்கிருந்து தப்பி எப்படி ப்ரபு சரணத்தையும், கடைசியில் ப்ருந்தாவனத்தையும் அடைந்தார் என்று பார்த்தோம். ராம்கேளியில் மஹாப்ரபுவை தரிசித்த பின், ரூபர் மீண்டும் கௌட தேசத்திற்கு செல்லவேயில்லை. தன்னுடைய சொத்து-பணம் எல்லாவற்றையும், ஒரு படகில் ஏற்றி, சில வேலையாட்களுடன் தனது பிறந்த ஊரான பதேஹாபாத் சென்றுவிட்டார். அங்கு, தனது பாதி சொத்தை ப்ராம்மணர்களுக்கும் தீனர்களுக்கும் அளித்தார். குடும்பத்திற்கு கொஞ்சம் அளித்துவிட்டு **10,000** ரூபாய் காசை கௌட தேசத்தில் ஒரு வ்யாபாரியிடம் ஒப்படைத்தார். (இந்த தனத்தை கொண்டே ஸனாதனர் சிறையிலிருந்து தப்பினார்.) ஸனாதனர் சிறையிலிடப்பட்டுள்ளார் என்ற செய்தி கிட்டும் முன்பே, அவர் மஹாப்ரபு இருக்கும் இடம் தேடி, இரண்டு வேலையாட்களை அனுப்பியிருந்தார். அவர்கள், ப்ரபு வனமார்க்கமாக, ஸ்ரீப்ருந்தாவன யாத்திரைக்கு கிளம்பிவிட்டார் என்ற செய்தியைச் சொன்னார்கள். இதை கேள்வியுற்றதும், ரூபர் தனது இளைய ஸகோதரனான அனூப்புடன், ப்ரபுவைத் தேடி ப்ருந்தாவனம் நோக்கிச் சென்றார். அப்பொழுது மிகவும் ரகசியமாக, அவர் ஸனாதனருக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில், தான் அனூப்புடன் ப்ரபுவைத் தேடி, ப்ருந்தாவன் போய்க் கொண்டிருப்பதையும், ப்ரபுவை காணாமல், அவர் சரணங்களில் சரண் புகாமல், இனி ஒரு கணம் கூட உயிர் தரிக்க முடியாத தனது நிலையையும் கூறி, மேலும் கௌட வ்யாபாரியிடம் ஒப்படைத்துள்ள பணத்தைப் பற்றியும்

கூறியிருந்தார். அதை சிறையிலிருந்து தப்பிக்க உபயோகப்படுத்திக் கொள்ளுமாறு கூறியிருந்தார். சீக்கிரமே சிறையிலிருந்து வெளி வந்து, ப்ருந்தாவனத்திற்கு வந்துவிடும்படியும் கூறியிருந்தார். பின், தனது ஸகோதரன் அனூப்புடன் ப்ரபுவைத் தேடிக் கொண்டே, காசி வழியாக ப்ரயாகையை அடைந்தார்.

ப்ரயாகையிலேயே அவருக்கு மஹாப்ரபுவின் தரிசனம் கிடைத்தது. அச்சமயம் ப்ரபு ப்ரேமாவேசத்தில் பக்தர்களுடன் கீர்த்தனம் செய்தவாறே, பிந்து மாதவனின் தரிசனத்திற்கு சென்று கொண்டிருந்தார். அந்த இரு சகோதரர்களும் கலந்துவிட்டார்கள். ப்ரபு பகவானை தரிசனம் செய்து திரும்பிவிட்டார். அன்று ப்ரபுவை ஒரு தென்னாட்டு ப்ராம்மணர் பிக்ஷைக்கு அழைத்திருந்தார். அந்த ப்ராம்மணர் வீட்டிற்கு ப்ரபு செல்லும்பொழுது, கூட்டம் சற்று விலகியதும், இரு சகோதரர்களும் ப்ரபுவின் பின்னாடியே, அந்த ப்ராம்மணரின் வீட்டிற்குள் நுழைந்துவிட்டார்கள்.

(தொடரும்)


**love is eternal.....we build homes with love**

rk

radha krishna real estates

**rajmani group of companies**

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

# வீடு தேடி வருவான் விட்டலன் -27

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

## ஸ்ரீஞானேஸ்வரர்-16

அதன்பின் அங்கிருந்து ஞானேஸ்வரர் கிளம்பினார். அவருடனேயே, அந்த எருமை மாடும் கிளம்பியது. ஞானேஸ்வரர் சமாதி அருகே இந்த எருமை மாட்டிற்கும் சமாதி உள்ளது. இந்த எருமை மாட்டின் சமாதிக்கு சென்று வணங்கி பிரார்த்தனை செய்வோருக்கு வேண்டியது கிடைக்க பெறுகிறது. இன்றளவும், பக்தர்கள் அந்த சமாதிக்கும் சென்று பூஜை செய்கிறார்கள். ஞானேஸ்வரர் பகவத்கீதைக்கு பாஷ்யம் எழுதியபொழுது, அதை இந்த எருமை மாட்டிடம் படித்து காண்பிப்பாராம். அதுவும் 'நன்றாக இருக்கிறது' என்று தலை ஆட்டுமாம். ஞானேஸ்வரரை விட்டு, அது இறுதி வரை பிரியவே இல்லை.

'சரீரத்தை பார்க்காதே. உள்ளிருந்து இயக்கும் ஈஸ்வரனை பார். ஆத்மஸ்வரூபமாக ஒருவரை பார்க்கையில் பேத புத்தி அகன்று, எங்கும் அந்த ஈஸ்வரன்தான் இருக்கிறான் என்பது தெரியும்' என்று ஞானிகள் உபதேசிப்பார்கள். அவர்களுக்கு அனுபவத்தில் தெரியக் கூடிய உண்மை அது. ஆனால், அவர்கள் அனுபவிக்கும் உண்மை பிறருக்கு புரியாதது. பிறரால் அனுபவிக்க முடியாதது. அவர்கள் அருளால் ஆறறிவு படைத்த மனிதன் சுத்தனாகி, ஆத்ம ஞானம் அடையலாம். ஆனால், இங்கு ஞானேஸ்வரரோ, மனிதப்பிறவியை விட கீழான பிறவியான, தமோ குணத்தையே பிரதானமாக கொண்ட ஒரு எருமை மாட்டிடம் ப்ரும்மத்தை பார்த்தார் என்பது மட்டுமல்லாமல், அது உண்மை என்பதை பிறரையும் அனுபவிக்க வைத்தார் என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். பசுமாட்டை வேதம் சொல்ல வைத்தார் என்றால் கூட, பசுமாடு ஸர்வ தேவதா ஸ்வரூபம் என்று சொல்லிவிடலாம். ஆனால் ஒரு எருமையை வேதம் சொல்ல வைத்தார் என்பதில் இருந்தே ஞானேஸ்வரரின் பிரும்ம நிஷ்டை எத்தகையது என்பது புரிகிறது அல்லவா?

## ஞானேஸ்வரீ

பூனாவிலிருந்து 200 கி.மீ. தொலைவில், மேவாஸா என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இங்கு கல்லேஸ்வரர் என்கிற சிவன் இருக்கிறார். இவருக்கு கோவில் உண்டு. பழங்காலத்தில் மிக பிரம்மாண்டமாக, இந்த கோவில் இருந்து இருக்கிறது. பல காலத்திற்கு பின், சிதிலங்களடைந்த இக்கோவிலை புனர்நிர்மாணம் செய்து இருக்கிறார்கள். இப்பொழுது மண்டபம் போல் இருக்கிறது. இங்கு உள்ள லிங்கம்தான் கல்லேஸ்வரர். இந்த ஸ்வாமிக்கு ஆரத்தி காண்பித்து, அபிஷேகம் செய்து வழிபடுகின்றனர். இந்த கோவிலிற்கும் ஞானேஸ்வரருக்கும் பெரிய சம்பந்தம் உண்டு. ஞானேஸ்வரர், வேதம் சொல்ல வைத்த எருமை மாட்டுடன் இந்த மேவாஸா என்கிற ஊருக்கு வந்தார். அவர் ஊருக்கு வந்த அன்று, ஒரு வீட்டில் சச்சிதானந்தம் என்ற மனிதன் இறந்து விட்டான். அவன் மனைவி ‘ஓ’வென அழுது கொண்டிருந்தாள். ஞானேஸ்வரர் கருணை நிரம்பியவர். அழும் அந்த பெண்ணைப் பார்த்து, ‘ஏன் அழுகிறாய்?’ என கேட்டார்.

(தொடரும்)


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

## சனாதனப்புதிர் பகுதி 85 -- விடைகள் -ஆத்ரேயன்

1. இருபது; மனு, ஆங்கிரஸ், ஆபஸ்தம்பர், ப்ருஹஸ்பதி, கௌதமர், தக்ஷன், ஹாரிதன், காத்யாயனர், லிகிதர், பராசரர், சங்கர், சம்வர்த்தர், சதாதபர், வசிஷ்டர், விஷ்ணு, வியாசர், ஔசநசர்(சுக்ராச்சாரியார்), யாக்ஞவல்கியர், யமன்.
2. 12 அத்யாயங்கள் - 2694 ஸ்லோகங்கள்.
3. 8 அத்யாயங்கள் - 72 ஸ்லோகங்கள். ப்ராயச்சித்த விதானத்தை பற்றி.
4. எட்டு அத்யாயங்கள்.
5. 29 அத்யாயங்கள் - 200 ஸ்லோகங்கள்.
6. 80 ஸ்லோகங்கள்.
7. 29 அத்யாயங்கள்.
8. 7 அத்யாயங்கள் - 192 ஸ்லோகங்கள். தக்ஷ ப்ரஜாபதி.
9. ஏழு அத்யாயங்கள்.
10. 26 அத்யாயங்கள் - 422 ஸ்லோகங்கள்.

## சனாதனப்புதிர் பகுதி 85 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. யாக்ஞவல்கியர்படி எத்தனை நீதி நூல்கள் உள்ளன? அவைகள் யாரால் இயற்றப்பட்டன?
2. மனுஸ்மிருதியில் எத்தனை அத்யாயங்கள், ஸ்லோகங்கள் உள்ளன?
3. ஆங்கிரஸ சம்ஹிதையில் எத்தனை அத்யாயங்கள், எத்தனை ஸ்லோகங்கள் - எதைப்பற்றி சொல்கிறது?
4. அத்ரி சம்ஹிதையில் எத்தனை ஸ்லோகங்கள் உள்ளன?
5. ஆபஸ்தம்ப சம்ஹிதையில் எத்தனை அத்யாயங்கள், ஸ்லோகங்கள் உள்ளன?
6. ப்ரஹஸ்பதி சம்ஹிதையில் எத்தனை ஸ்லோகங்கள் உள்ளன?
7. கௌதம சம்ஹிதையில் எத்தனை ஸ்லோகங்கள் உள்ளன??
8. தக்ஷ சம்ஹிதையில் எத்தனை அத்யாயங்கள் ஸ்லோகங்கள் உள்ளன? இயற்றியது யார்?
9. ஹாரித சம்ஹிதையில் எத்தனை ஸ்லோகங்கள் உள்ளன?
10. காத்யாயன சம்ஹிதையில் எத்தனை அத்யாயங்கள் ஸ்லோகங்கள் உள்ளன?

# பாலகர்களுக்கு ஒரு கதை



## என்னுடையது!

மாதவனின் வீடு ஊரிலேயே பெரிய வீடு; அதை நன்கு கட்டி இருந்தான். ஊரில் பலரும் அந்த வீட்டை நல்ல விலைக்கு வாங்க ஆசைப்பட்டனர். ஆனாலும் மாதவனுக்கு அதை விற்க கொஞ்சமும் விருப்பம் இல்லை.

ஒருசமயம் மாதவன் வேறு தேசத்திற்கு, வியாபார விஷயமாக சென்றிருந்தான். ஒருமாத காலம் கழித்து, அவன் வந்தபோது அவனுக்கு ஒரு அதிர்ச்சி காத்து இருந்தது. தன் அழகிய வீடு, நெருப்பில் எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். எல்லோரும் வீட்டை விலை கொடுத்து வாங்க விரும்பிய பொழுது, அதை விற்க ஆசைப்படாமல், தனக்கு என்றே வைத்துக்கொண்ட அவனுக்கு அதன் மேல் கொள்ளை பிரியம் இருந்தது. இப்பொழுது அது பற்றி எரியவே, அவனுக்கு வயிறெரிந்தது. மூச்சு முட்டி, கண்களில் நீர் கோத்து கொண்டது. அடடே! தன் குடும்பத்தாரும் குழந்தைகளும் என்ன ஆனரோ என்று அவன் மனது நினைக்க, மேலும் பயப்படலானான் அவன்.

ஆனால் தீ அவன் முதலில் பார்க்கையிலேயே கடுமையாக பரவி இருந்தது. பார்த்து பார்த்து, அழகாய் கட்டிய வீடு கண் முன் எரிவதை பார்த்து அழுகையாய் வந்தது. அந்த வீட்டில் ஒன்றும் மிஞ்ச போவதில்லைதான். அங்கு கூடி இருந்தோரும் அவனை பரிதாபமாக பார்த்தனர். அப்பொழுது அவனது முதல் மகன் மூச்சிரைக்க ஓடி வந்து, அவன் காதுபட சொன்னான், ‘அப்பா! கவலைப்படாதீர்கள். நீங்கள் வெளி தேசம் சென்றிருந்தபொழுது, இந்த வீட்டை நல்ல விலைக்கு விற்று விட்டோம். இது இப்பொழுது நம் வீடல்ல. கவலை தேவை இல்லை’ என்றான். தன் வீடு எரிகிறது என அழுது கொண்டிருந்த மாதவனின் அழுகை சட்டென நின்று போனது. ஏனெனில், இப்பொழுது அது அவன் வீடில்லை; வேறு யாரோ ஒருவருடையதுதானே எரிகிறது!! இப்பொழுது அவனும் மற்றவர்களுடன் சேர்ந்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்!

ஒருகணம்தான் அது நிலைத்திருக்கும். அதற்குள் அவன் மனைவி அருகில் வந்திருந்தாள். அவள், "வீட்டை விற்றாலும்

முழுப்பணமும் வரவில்லையே. முன்பணம்தானே வந்து உள்ளது. மீதி பணம் வருமோ வராதோ' என புலம்பினாள். அவ்வளவுதான்! உடனடியாக ஜிவுஜிவு என்று மறுபடி மாதவனுக்கு மார்பு படபடவென அடித்து கொண்டது. தீயின் ஜ்வாலைகளின் வெப்பத்துடன் அவன் பதட்டமும் சேர்ந்து கொள்ள, உடல் குப்பென வியர்த்தது. ஒருகணத்தில் மறுபடி அவன் மனம், ஊசலாட ஆரம்பித்தது. தன் வீட்டாரின் முடிவுகளை மெச்சுவதா அல்லது தன் விதியை நொந்து கொள்வதா என, அவனுக்கு தெரியவில்லை. தனது என எண்ணும்பொழுது, அந்த பொருள் தன்னை விட்டு செல்கையில் கவலையும் பயமும் வருத்தமும் உண்டாகிறது. தன்னுடையது இல்லை எனும்பொழுதோ, பொருள்களின் அழிவு மனிதரை பாதிப்பதில்லை.

மாதவன் என்ன செய்வது என தெரியாமல் குழம்பி, மனபலம் இழந்து தரையில் தலை மேல் கை வைத்தபடி உட்கார்ந்து விட்டான். அப்போது அவன் அன்னை வந்தாள்; மாதவா! நீ பார்த்து செலவு செய்து. ஆசையுடன் கட்டிய வீடு எரிவதை பார்த்தால் வருத்தம் வருவது சகஜம்தான். ஆனால், இவர்கள் உன்னிடம் சொல்லி இருப்பார்கள் என நினைக்கிறேன். வீட்டை நம்மிடம் வாங்கியவர், சர்வ நிச்சயமாக பேசியபடி முழுப்பணத்தையும் கொடுத்து விடுவார். ஏனெனில் அவர் முன்பணம்தான் கொடுத்தவுடன், நாம் வீட்டை காலி செய்து அவரிடம் கொடுத்து விட்டோம். அவரும் தனது சில பொருள்களை உள்ளே வைத்திருந்தார் என்றாள். அவ்வளவுதான்! மாதவன் மனது மறுபடி குஷியானது. வீடு அவனுடையதில்லை. அழிவு அவனுக்கு சொந்தமில்லை!! இதுதான் அவன் மனம் சொல்லியது. ஒரே வீடுதானே அது? வீடு மாறவில்லை. அது எரிவதும் மாறவில்லை. ஆனால் அது எரிந்து கொண்டிருக்கையிலேயே, மாதவனின் மனம் மாறி மாறி கவலையும் பயமும் துக்கமும் சந்தோஷமும் கவலையற்ற தன்மையும் கொண்டதாக ஆகி விட்டதே! என்ன ஆச்சரியம்!!!

பொருள்களுடன் ஏற்படும் பந்தம்தான் ஒருவரை துக்கத்தில் ஆழ்த்துகிறது. அனைத்துக்கும் சொந்தக்காரன் ஸ்வாமி என இருக்கும் சாதுக்களை, எந்த சம்பவமும் பாதிப்பதில்லை. அவர்களுடன் சேர்ந்து சத்சங்கத்தில் பழகி வந்தால், கொஞ்சம் கொஞ்சமாக அந்த பற்றற்ற தன்மை எல்லோருக்கும் வரும்.

**மார்ச் 28 - ஏப்ரல் 3 -** கன்யாகுமரி மாயம்மா சமாஜத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பாகவத ப்ரவசனம் செய்தருளினார்கள். திரளான அன்பர்கள் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ப்ரவசனம் கேட்டு மகிழ்ந்தனர்.

**ஏப்ரல் 8 -** யுகாதியை ஒட்டி விட்டலாபுரம் ஸ்ரீபாண்டுரங்கன் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் திருமஞ்சனம், நாமகீர்த்தனம் நடைபெற்றது.

**ஏப்ரல் 11 -** திருநாங்கூர் திருக்காவளம்பாடி ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி திருக்கோவில் மஹா சம்ப்ரோக்ஷணம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மிக விமரிசையாக நடைபெற்றது. பெருமாள் அலங்காரங்களில் ஜொலித்தார். இத்திருக்கோவிலில் ஆழ்வார் அருளிச்செய்தபடி நந்தவனம் அமைத்துள்ளதையும், **Eyetex** ஸ்ரீதேவநாதன் இத்திருப்பணியில் முழுமையாக தன்னை ஈடுபடுத்தி கொண்டார் என்பதும் சென்ற இதழில் வெளிவந்திருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

**ஏப்ரல் 25 -** மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாச பெருமாளின் மஹா சம்ப்ரோக்ஷணம், ஸ்ரீஸ்வாமிஜியின் முன்னிலையில் துர்முகி வருடம், சித்திரை 12ஆம் தேதி, அனுஷ நக்ஷத்திரமும் த்விதிய திதியும் சித்த யோகமும் கூடிய சுப தினத்தில் பெரும் விமரிசையாக நடைபெற்றது. பெருந்திரளான அன்பர்கள் கலந்து கொண்டு பெருமாளின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரமாயினர். அனைவருக்கும் விமரிசையாக கோவிலில் அன்னப்ரசாதம் வழங்கப்பட்டது. (படங்கள் அடுத்த இதழில் இடம் பெறும்)

**ஏப்ரல் 21 -** ஸ்ரீஸ்வாமிஜியின் பூரண அருளாசிகளுடன் பெங்களூரு ஜெயநகரில் **கர்நாடகா நாமத்வார்** துவங்கப்பட்டது. இங்கு தினமும் காலையும் மாலையும் மஹாமந்திர நாமகீர்த்தனம் நடைபெறும். **இதன் முகவரி -** Karnataka Namadwaar, Prayer Centre, Door No. T4, 33rd Cross, 4th 'T' Block, Jayanagar, Bengaluru - 41 Timings - 8-11AM,5-8PM Contact : Sri Shekhar 94495 92956

**அமெரிக்கா சத்சங்கங்கள் -** ஸ்ரீஸ்வாமிஜியின் பூரண அருளாசிகளுடன் பூர்ணிமாஜி தொடர்ந்து அமெரிக்காவில் சத்சங்கங்களை நிகழ்த்தி வருகிறார். ஒவ்வொரு சத்சங்கத்திலும் அன்பர்கள் திரளாக வந்திருந்து நாம மஹிமையையும் குரு

மஹிமையையும் பாகவத ரசத்தையும் கேட்டு மகிழ்கின்றனர் என்பது குறிப்பித்தக்கது. மார்ச் 25, 26, 28இல் - 60அன்பர்கள் முன்னிலையில் Sugarlandஇல் சந்த் துளசிதாசர், சந்த நாமதேவர் மற்றும் கோவர்தனலீலை பற்றி உபன்யாசம் செய்தார். மார்ச் 27இல் ஹூஸ்டன் நாமத்வாரின் ஆறாவது வருட ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. ஹூஸ்டன் நாமத்வாரில் நூற்றுக்கும் மேலானவர் மத்தியில் குழந்தைகள் ப்ரஹலாத நாடகம் நிகழ்த்தினார்கள். பூர்ணிமாஜி தொடர்ந்து மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நிகழ்த்தினார். மார்ச் 26 காலையிலும் மார்ச் 29 மாலையிலும் Cypressஇல் பாகவத தர்மம் தலைப்பில் பேசினார். மார்ச் 31 முதல் ஏப்ரல் 6 வரை ப்ளோரிடா ஷீரடி சாயிபாபா கோவிலில் 80 அன்பர்கள் முன்பு பாகவத்தை சுவையாக உபன்யாசம் செய்தார். ஏப்ரல் 7 முதல் 15வரை அட்லாண்டா ஹனுமான் மந்திரில் ராம பக்தி சாம்ராஜ்யம் எனும் தலைப்பில் சபரி, துளசிதாசர், கபீர்தாசர், தியாகராஜர், பத்ராசல ராமதாசர், விபீஷணன், அனுமான் ஆகிய பக்தர்களை பற்றி மிக அருமையாக உபன்யாசம் செய்தார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட அன்பர்கள் கதை கேட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏப்ரல் 16,17 தேதிகளிலும் அலபாமா இந்து கோவிலில் 80க்கும் மேற்பட்ட அன்பர்கள் முன்பாக துளசிதாசர் மற்றும் அனுமத் ப்ரபாவம் குறித்து பேசினார். ஏப்ரல் 17 - அட்லாண்டா காட் சத்சங்கம் சார்பில் ஏழு வாரங்களாக தொடர்ந்து மதுரகீத உத்ஸவம் நடைபெற்றது. இதில் எளிமையும் சுலபத்தில் புரிந்து கொள்ளும் விதமாயும் உள்ள மனதை ஈர்க்கும் ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனங்களை வாத்ய இசையுடன் மிக அழகாக பக்தர்கள் பாடினர். இதன் பூர்த்தியில் பூர்ணிமாஜி கலந்து கொண்டார்.

**மார்ச் 28 - ஏப்ரல் 3** - கோயமுத்தூர் ராம் நகர் ராமர் கோவிலில் ராமானுஜம்ஜி ஸ்ரீமத் பாகவத உபன்யாசம் செய்தார். பெருந்திரளான அன்பர்கள் வந்து சிரவணம் செய்து குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

மார்ச் 13 - திருச்சி இந்திரா காந்தி கல்லூரியில் நடைபெற்ற மங்கையர் மலர் ஆண்டு விழாவில், ஸ்ரீ ஸ்ரீ முரளீதர குருஜி சத்சங்கம் கேகே நகர் 'ஸ்ரீமதி காமாக்ஷி நாம குரூப்' பங்கேற்றனர்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீ ஹரி பாபாஜீ - 4

மூன்று வருடம் கங்கை கரையிலிருந்து பின் அங்கிருந்து கிளம்பிவிட்டார். நடந்து, அங்குமிங்கும் திரிந்து, கடைசியில் ஹோஷியார்புர் திரும்பினார். மிகவும் ஸங்கோஜத்துடன் இரவில் குருதேவரை பார்க்கச் சென்றார். அவரை ஸந்யாஸ கோலத்தில் கண்ட குருநாதர், ஸந்தோஷப்பட்டார். 'நீ ஸ்வயமாக ஸாதுவாக ஆகயிருப்பதனால், உனக்கு 'ஸ்வத:ப்ரகாஷ்' என்று பெயர் வைக்கிறேன்' என்றார்.

சிலகாலம் மீண்டும் குருஸேவை செய்த பின், புலந்தஷஹர் ஜில்லாவிலுள்ள அனூப்ஷஹர் அருகில் ப்ருகுக்ஷேத்ரத்தில் கங்கை கரையில் மீண்டும் வஸிக்கலானார். அங்கு ஸ்ரீஒடியா பாபா மற்றும் ஸ்ரீஅச்யுத முனி என்ற மஹான்களுடன், அவருக்கு சந்திப்பு ஏற்பட்டது. அச்யுத முனியிடமிருந்து அவர் வேதாந்த க்ரந்தங்களை கற்றார். அச்யுதமுனி வர்தா சென்றபோது, இவரையும் கூடவே அழைத்து சென்றார். அங்கும் வேதாந்த பாடம் தொடர்ந்தது.

வர்தாவில் ஹனுமாகடீ எனும் ஒரு இடம் உள்ளது. அங்கு ஸமர்த்த ராமதாஸரின் ஸம்ப்ரதாயத்தை ஒட்டி அகண்டமாக, 'ஸ்ரீராம ஜய ராம ஜய ஜய ராம' என்ற நாமகீர்த்தனம் நடந்து கொண்டேயிருந்தது. ஸ்ரீபராஞ்ஜ்பே என்பவர் அங்கு அதிகாரியாக இருந்தார். அந்த இடத்தில் தான் முதன் முறையாக ப்ரேமரஸம் தோய்ந்த நாமகீர்த்தனம் அவர் காதுகளில் விழுந்தது. அது அவரின் ஹ்ருதயத்தை தொட்டது. முன்பு அனுபவிக்காத, இனம்புரியாத, பல புதிய பாவங்கள் அவர் ஹ்ருதயத்தில் உதயமானது. இந்த மாற்றத்தால் அவரது மனது ஒரு புதிய திசையை தேட ஆரம்பித்தது.

அச்சமயம் அவர் மனதில் உதித்த ஸாத்வீக பாவங்களால் திருபராஞ்ஜ்பே அவர்களின் த்யானம், பாபாவின் பால் ஈர்க்கப்பட்டது. அவரை தகுந்த அதிகாரியாக எண்ணி, **'Lord Gauranga'** என்ற புஸ்தகத்தை அவரிடம் அளித்தார்

பராஞ்ஜ்பே. இது மஹாத்மா ஷிஷிர்குமார் கோஷ் எழுதிய புத்தகமாகும். அப்புத்தகத்தை படித்ததும், தான் தேடிக் கொண்டிருந்த புதிய திசை தனக்கு கிடைத்துவிட்டதாக எண்ணினார். மஹாப்ரபு காண்பித்த பக்தி மார்க்கத்தில் அவரது மனம், தடையேதுமின்றி ப்ரவாஹிக்கும் நதியை போல் சென்றது.

இதுவரை அவர் வேதாந்திகளின் ஸங்கத்திலேயே இருந்து, வேதாந்த க்ரந்தங்களையே கற்றார். பிறவியிலேயே அவரிடமிருந்த பக்தி ஸம்ஸ்காரங்களை எழுப்பும்படியான ஸங்கமோ புத்தகமோ அவருக்கு கிடைக்கவில்லை. ஞானம் தான் உயர்ந்த லக்ஷியம் என்று எண்ணி, அதையடைய தாரண - த்யானம் என்று பழகி வந்தார். ஆனால் ப்ரம்மத்திலேயே ஒன்றி ப்ரம்மானந்தத்தை அனுபவிப்பதைக் காட்டிலும், பக்திரஸம் எத்தனை மேன்மையானது மற்றும் உயர்ந்தது என்றும், அவர் அதுவரை அறியவில்லை.

தேசபக்தரான ஷிஷிர்குமார் கோஷும் ஞான மார்க்கத்தில் ஒரு ஸாதகராகத் தான் இருந்தார். ஆனால் சைதன்ய சரிதாம்ருதம் எனும் க்ரந்தத்தை தொட்ட மாத்திரத்தில், அவர் பக்தியில் மூழ்கிவிட்டார். பக்தி பாவங்கள் ஏற்பட்ட ஒருவருக்கு, பகவானிடம் ப்ரேமை ஸித்தித்த ஒருவருக்கு, ஞானத்தின் உதவி தேவையில்லை. ஒருக்காலும் அவர்கள் பக்தி மார்க்கத்தை விட்டு ஞான மார்க்கத்திற்கு செல்வதேயில்லை. ஆனால் ஞானிகளில் பலர் ஞான மார்க்கத்தை விட்டு பக்தியை அவலம்பிப்பதை நாம் பார்க்கலாம். ஸ்ரீமத்பாகவதமே கூறுகிறதல்லவா

ஆத்மாராமாஸ்ச முனய: நிர்க்ரந்தா அப்யுருக்ரமே |
குர்வன்யஹைதுகீம் பக்திம் இத்தம் பூதகுணோ ஹரி: ||

என்று, நிர்குண ப்ரம்மத்திலேயே ரமிக்கும் முனிவர்களும் கூட, ஹரியின் குணங்களால் ஆகர்ஷிக்கப்பட்டு அவனிடம் எதையும் எதிர்பார்க்காமல் பக்தி செய்கின்றனர்.

ஸ்வத:ப்ரகாஷ்ஜி நித்யம் ஹனுமான்கடீக்கு செல்லலானார். கீர்த்தனத்தில் அவருக்கு ருசி வளர்ந்துகொண்டே வந்தது.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா - 147*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

முந்நீர் என்றது திருப்பாற்கடலை.வெற்பு என்பது கடைதற்கு மத்தாக இடப்பெற்ற மந்தர மலை. மலை நீருள் செல்லாதபடி ஆதிசேடன் தாங்கிய படியை சிரத்து ஏற்றி என்றார் எனலாம். இனி கூர்மமாக இருந்து மந்தர மலை நீருள் அமிழாதபடித் தம்மேல் ஏற்றி நிறுத்திய திருமால் செயலாகவும் கூறலாம். தேவரும் அசுரரும் கடைந்தனர். ஆதலால் இருதிறத்தோர்க்கும் என்றார். இருவயின் அரணாகி-திருமால் இடை நின்று கடையும்படி இருப்பக்கத்திலும் தலைப்பக்கம் அவுணரும், வால் பக்கம் தேவரும் வாங்க (இழுக்க) அப்பொழுது அறாமல் ஒரு தோழம் காலம் கடை கயிறாக ஆதிசேடனார் இருந்தார் என்பது கூற பெற்றது. கடை கயிறாக இருந்தது வாசுகி என்பதாயினும், பாம்பு என்னும் ஒற்றுமையால் ஆதிசேடன் மேற்றாக கூறினார்.

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாகக் கடல்வண்ணன் பண்பொருநாள் கடல்வயிறு கலக்கினைனையே! என்ற சிலப்பதிகாரம் இங்கு நினைத்தற்குரியது. தோழம் என்பது ஒரு எண்ணிக்கையை குறிக்கும் சொல். ஆண்டு, மாதம், வாரம், நாள் என்பது போல - வெள்ளம், ஆம்பல், தாமரை என்பனவும் பழந்தமிழ் எண்களே. ஒரு தோழம் காலம் என்பது ஒரு கால அளவு குறித்து என்றது. ஒரு தோழம் தொண்டர் உளன் என்ற திருவெம்பாவையும், உண்ணாற்கரிய நஞ்சையுண்டு ஒரு தோழம் தேவர் விண்ணிற்பொலிய (சம்பந்தர் தேவராம்) ஆகிய இடங்களில் தோழம் என்பது எண் குறித்து நின்றது அறிக.

மிகாஅ மறவிய மேவலி எல்லாம்
புகாஅ எதிர் பூண்டாரும் தாம்

மிக்க வீரம் செறிந்த உயர்ந்த வலிமை எல்லாம் தன்னிதில் புகும்படி எல்லா வலிகளையும்

மேற்கொண்டுள்ளவரும் ஆதிசேடனாகிய அவரே. எனவே வலியின் மிக்கவர் என்றாயிற்று.

மணிபுரை மாமலை ஞாறிய ஞாலம்

அணிபோல் பொறுத்தாரும் தாஅம்

மணிபோலப் பொருந்திய பெருமலைகள் தோன்றிய உலகத்தை தனக்கு ஓர் அணிகலன் போல சுமந்துள்ளவரும் அவரே. இப்பூமி அவர்க்கு ஓர் ஆபரணம் போல உள்ளது எனவே அவர் ஆற்றல் கூறியது.

.. பணிவில் சீர்ச்

செல்விடை பாகன் திரிபுரம் செற்றுழிக்

கல்லுயூர் சென்னி இமயவில் நாண் ஆகித்

தொல் புகழ் தந்திரும் தாம்

பணிதல் இல்லாத புகழை உடையவனாகி செல்லுகின்ற எருது என்னும் விடையை ஊர்தியாக உடைய சிவபெருமான் திரிபுரத்தசுர்களை அழித்தபொழுது கற்களால் உயர்ந்த உச்சியை உடைய இமயமலை ஆகிய வில்லுக்கு கயிறாக இருந்து பழமையான புகழை கொடுத்தவரும் ஆதிசேடனாகிய அவர்தாம். (தொடரும்)




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission ஏற்றுக்கொள்ளப்படும்.**
- **சந்தா அனுப்ப முகவரி:** Guruji Sri Muralidhara Swamigal Mission, Plot No.11, Door No. 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83.
- மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


| சத்சங்க நிகழ்ச்சிகள் | | |
|---|---|---|
| ஏகாதசி | மே 3, 17 | ஜூன் 1, 16 & 30 |
| | May 3, 17 | June 1, 16 & 30 |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
Plot No11, Door No 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**